www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

11 - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 50

I பலவுள் தெரிக: 8 x 1 = 8

1. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது: 'கவிதைக்கிரீடம்' என்று போற்றப்படுவது.

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

2. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

3. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்.

அ) முதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

4. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

5. கூற்று: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல், காரணம்: சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு; காரணம் சரி

6. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

7. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

8. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

II. அ. கீழ்வரும் குறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி: 1 x 2 = 2

9. செந்துறைப்பாடாண் பாட்டு - துறை விளக்கம் எழுதுக.

10. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

ஆ. கீழ்வரும் குறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி: 1 x

11. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

12. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

கீழ்வரும் குறுவினா எவையேனும் இரண்டனுக்கு விடைதருக. 2 x 2 = 4

13. ஆக்கப் பெயர்கள் என்றால் என்ன?

14. *தொடர் அமைத்து எழுதுக* - அன்றொருநாள், நிழலிலிருந்து

15. *கலைச்சொல் தருக.*

Equality, Debate

III. அ. சிறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1 x 4 = 4

16. அயர்ந்து, எழுந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

17. 'உயர்தமிழை உயிரென்று போற்று மின்கள்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

ஆ. சிறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1 x 4 = 4

18. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

19. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1 x 4 = 4

20. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினை எடுத்தெழுதுக.

'தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதே'

21. தன்விவரக் குறிப்பு ஒன்று எழுதுக.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 6 = 18

22. அ) சிங்கி பெற்ற பரிசுப்பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவனவற்றை தொகுத்து எழுதுக. *(அல்லது)*

ஆ) பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

23. அ) கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக. *(அல்லது)*

ஆ) சுந்தரராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

24. அ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

V. மனப்பாடப் பகுதி. 1 x 4 = 4

25. 'சிற்றூரும் .......... ' எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com